29.01.2026

LAOP.No.5/2022

ம. சா. 1 பழனிச்சாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–

நில ஆர்ஜிதம் செய்த நிலம் பூசாரிபட்டி கிராமத்தில் சர்வே எண்.255/3 ல் 279/5 சதுர மீட்டர் நிலம் எனக்கும் என் தம்பிக்கும் உரியது ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் விவசாய நிலங்கள் என்றால் இல்லை. அந்த இடத்தில் ஓட்டு வீடும், கோழிப்பண்ணையும் இருந்தது, மேற்படி விவரத்தை ஆட்சேபனையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பூசாரிபட்டி கிராமம் சர்வே எண்.164/6 நிலம் என் நிலத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் 3/4 கி.மீ. தூரம் இருக்கும். மேற்படி சர்வே எண் என் நிலத்திலிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. அவார்டு தொகை கொடுப்பதற்கு முன்பு எனக்கும் என் தம்பிக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நாங்கள் ஆஜரானோம். அந்த விசாரணையில் நாங்கள் ஆட்சேபனை செய்தோம். அதாற்கு அவர்கள் வழக்கு போட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அந்த விசாரணையில் எங்களுக்கு சாதக பாதகத்தை விளக்கிக்கூற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு சரியான முறைப்படி சந்தைமதிப்புத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.29 17:18:15 +0530

Principal District Judge,
Dindigul.